


முஹம்மது அட்டா. ஆம். இவனைப் பற்றித்தான் இப்போது பேசவேண்டும். ஏனெனில், செப்டெம்பர் 11 சம்பவத்தின் கமாண்டராகப் பணியாற்றிய பிரகஸ்பதி இவன். எகிப்தில் பிறந்து, ஜெர்மனியில் படித்து, வளர்ந்து, ஆப்கனிஸ்தானில் பயிற்சி பெற்று, அமெரிக்கா போய் செத்துப்போன முப்பத்து மூன்று வயது இளைஞன் (பிறந்தது 1968, செப்டெம்பர் 1).

அட்டா ஆரம்பத்தில் ஒரு சமர்த்துப் பையனாகத்தான் இருந்திருக்கிறான். கெய்ரோ பல்கலைக்கழகத்தில், கட்டடக் கலைப் பிரிவில் பட்டம் பெற்று, உள்ளூரிலேயே ஓர் உத்தியோகம் பார்த்துக்கொண்டு, மாதச் சம்பளத்தை ஒழுங்காக வீட்டில் கொடுத்துக்கொண்டிருந்தான். மேலே படிக்க வேண்டும் என்கிற ஆர்வம் மட்டும் இருந்திருக்கிறது. ஆனால், நடுத்தரக் குடும்பங்களுக்கே உரிய பொருளாதாரப் பிரச்னைகளால், அவனுக்கு அது சாத்தியமில்லாமல் இருந்தது.

அந்தச் சமயத்தில்தான் எகிப்துக்கு சுற்றுலா வந்திருந்த ஒரு ஜெர்மானியக் குடும்பத்தினரின் பழக்கம் அவனுக்கு ஏற்பட்டது. ஏதோ கொஞ்சம் ஒத்தாசை பண்ணியிருப்பான் போலிருக்கிறது. 'என்ன வேண்டும் உனக்கு?' என்று அவர்கள் கேட்டபோது, தான் மேற்படிப்பு படிக்க விரும்புவதாகச் சொன்னான் அட்டா.

தேசம் விட்டு தேசம் சுற்றுலா வருகிறவர்கள், வசதியானவர்களாகத்தானே இருக்கமுடியும்? ஆகவே, 'சரி நீ ஜெர்மனிக்கு வந்தால், அங்கே உன்னைப் படிக்க வைக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். 'சரி' என்று அட்டாவும் புறப்பட்டு ஜெர்மனிக்குப் போன கதைச் சுருக்கம் இதுதான்.

கொஞ்சநாள் (முப்பது நாட்களில்) ஜெர்மன் மொழி புத்தகத்தைப் படித்துவிட்டு, ஜூலை 1992-ம் ஆண்டு ஜெர்மனிக்குப் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தான். ஹாம்பர்க் நகரில் அந்தச் சுற்றுலாத் தம்பதிகள் வசித்து வந்தார்கள். அவர்கள் வீட்டில் போய் இறங்கி, ஹாம்பர்க் பல்கலைக்கழகத்தில் நகரக் கட்டுமானம் தொடர்பான ஒரு பொறியியல் படிப்பில் பதிவு செய்துகொண்டு, படிக்க ஆரம்பித்தான்.

ஜெர்மனிக்கு வந்த புதிதில் அட்டாவுக்கு மதப்பற்று மட்டுமே இருந்தது. தீவிர அடிப்படைவாத சிந்தனை எதுவும் அவனிடம் அப்போது இல்லை என்று தெரிகிறது. ஆனால், 1995 வாக்கில் ஹாம்பர்க் நகரில் அட்டா ஒரு முஸ்லிம் மாணவர் சங்கத்தை ஏற்படுத்தினான். அடுத்த இரு வருடங்களில் அந்நகரில் இருந்த கட்ஸ் மசூதிக்கு அடிக்கடி சென்று, அங்குள்ள நிர்வாகிகளுடன் கலந்து பேசிப் பழகி, பல பணிகளில் தன்னையும் அவர்களுடன் ஈடுபடுத்திக்கொள்ளத் தொடங்கினான்.

அடிப்படையில் கட்ஸ் மசூதிக்காரர்களின் நோக்கம், முஸ்லிம்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் இடையே உள்ள மன ரீதியிலான இடைவெளியைக் குறைத்து, சகோதரத்துவத்தைப் பெருக்குவதுதான். ஆனால், துரதிருஷ்டவசமாக அட்டா போன்றதொரு சகோதரத்துவம் விரும்பாத ஆசாமி, அவர்களுடன் இணைந்தது விசித்திரமே.

1997-க்குப் பிறகுதான் அட்டா மிகத் தீவிரமாக அமெரிக்க எதிர்ப்புக் கருத்துக்களை நண்பர்கள் வட்டாரத்தில் வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கிறான். நியூயார்க் நகர வர்த்தகம் முழுவதையும் யூதர்கள்தான் நிர்வகிக்கிறார்கள் என்றும், இது அரேபியர்களுக்கு எதிராக அமெரிக்கா திட்டமிட்டு வளர்த்துவிடும் ஒரு விஷமத்தனமான செயல் என்றும் அவன் சொல்லத் தொடங்கியிருக்கிறான்.

இதனைத் தொடர்ந்து, வெகு சீக்கிரமே அட்டாவின் பேச்சுகள் அவனை ஒரு தீவிரம் மிக்க ஜிகாதியாக நண்பர்கள் வட்டத்தில் வெளிக்காட்டியிருக்கிறது. 1998-ல் அட்டா ஒருமுறை எகிப்துக்குச் சென்று திரும்பியிருக்கிறான். அந்த எகிப்து பயணத்தின்போது, அவனைச் சந்தித்த ஒரு பழைய நண்பன் வியந்து போனான். காரணம், அட்டாவின் தோற்றம், நடை, உடை, பாவனைகள் அனைத்தும் அப்படியே மாறிவிட்டிருந்ததுதான்!

ஒரு சம்பிரதாய முஸ்லிம்போல தாடி வளர்த்து, தொப்பி அணிந்து, இளம் மதகுருவைப்போலக் காட்சியளித்திருக்கிறான் அட்டா. அவனது அமெரிக்க எதிர்ப்புணர்வுக்கு யார் தூபமிட்டுத் தூண்டிவிட்டார்கள் என்கிற விவரம் தெரியவில்லை. ஆனால், மிகக் குறுகிய காலத்தில் மிகத் தீவிரமான போராளியாக மனத்தளவில் மாறிவிட்டான் அட்டா.

தோதாக, அப்போது அவனுக்கு வாய்த்த வேறு மூன்று முஸ்லிம் நண்பர்களும் அவனைப்போலவே தீவிர மனோபாவம் கொண்டவர்களாக இருந்தார்கள். ஒருத்தன் பெயர் ரம்ஸி பினல்ஷிப். இவன் ஏமன் நாட்டைச் சேர்ந்தவன். அமெரிக்கா போக விசாவுக்கு அப்ளை பண்ணி, அது கிடைக்காமல், தான் ஒரு சூடான் நாட்டவன் என்று பொய் சொல்லி, ஜெர்மனிக்கு அகதியாக வந்து ஒட்டிக்கொண்டவன்.

இரண்டாவது நண்பன், மார்வான் அல் ஷெஹி. ஐக்கிய அரபுக் குடியரசைச் சேர்ந்த இவனும் படிப்பதற்காகத்தான் ஜெர்மனிக்கு வந்திருந்தான். ஒழுங்காகவும் படித்தான். ஆனால், திடீரென்று மதப்பற்று அதிகமாகி, பெரும்பாலான நேரம் குர்ஆன் ஓதுவதிலேயே கழிக்கத் தொடங்கினான். முஹம்மது நபி என்ன பணக்கார டிரெஸ்ஸா போட்டுக்கொண்டார்? நமக்கு மட்டும் எதற்கு இத்தனை ஆடம்பர ஆடைகள் என்று, ஒரே நாளில் தன்னுடைய அத்தனை கோட் சூட்களையும் தூக்கிக் கடாசிவிட்டு, அழுக்கான அங்கி ஒன்றை அணிந்து வலம் வரத்தொடங்கியவன் இவன்.

மூன்றாவது நண்பன், ஜியாத் ஜரா. லெபனான் நாட்டைச் சேர்ந்தவன். மற்றவர்களெல்லாம் படிப்பும் மதப்பற்றுமாக இருக்க, இவனுக்கு ஜெர்மனியில் ஒரு காதலி வேறு கிடைத்திருந்தாள். டூயட் பாடிய நேரம் போக, மிச்ச நேரத்தில்தான் இவன் அட்டாவுடன் தீவிரவாதப் பேச்சு பேசியிருக்கிறான்.

இந்த நால்வரணியின் பேச்சும் நடவடிக்கையும் கொஞ்சம் கொஞ்சமாக மாறத்தொடங்கி, படிப்பு ஒரு பெரிய விஷயமில்லை என்று முடிவு செய்து, ஃபுல் டைம் போராளி ஆகிவிடுவது என்று, இவர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு அபார்ட்மெண்ட்டை வாடகைக்கு எடுத்து வசிக்கத் தொடங்கியபோதுதான், அட்டாவுக்கு அல் காயிதாவின் தொடர்பு ஏற்பட்டது. அது ஒரு விசித்திரமான சம்பவம்.

கட்ஸ் மசூதிக்கு வந்துபோய்க்கொண்டிருந்த ஜெர்மானிய முஸ்லிம்களிடையே, ஒரு பெரிய மத அறிஞர் இருந்தார். அவர் பெயர் முகம்மது ஹைதர் ஜம்மார். மசூதிக்குத் தொழுகைக்கு வரும் இந்த நான்கு நண்பர்களும் ஜம்மாருடன் மணிக்கணக்கில் பேசுவார்கள். அப்படிப் பேசிப் பேசித் தங்கள் விருப்பம் படிப்பிலும், வசதியான வாழ்க்கையிலும் இல்லை என்று தெரிவித்து, மதக்கடமைகளைச் செய்வதற்காகத்தான் உயிர் வாழ்கிறோம் என்று சொன்னதன் பிறகு, அவர் அட்டாவையும் அவனது நண்பர்களையும் ஆப்கனிஸ்தானுக்குப் போகச் சொன்னார். ஆப்கன் என்றால் அல் காயிதா. அல் காயிதா என்றால் ஒசாமா பின்லேடன்.

ஆனால், அட்டா நண்பர்களுக்கு, ஆப்கனுக்குப் போவதைக் காட்டிலும் செச்னியாவுக்குப் போவதில்தான் விருப்பம் இருந்தது. ஏற்கெனவே, படிப்பு முடிந்ததும் ஜிகாத் என்று முடிவு செய்தவர்கள் என்கிறபடியால், நேரடியாக முதலில் செச்னியாவுக்குப் போய் அங்கு நடைபெறும் யுத்தத்தில் கலந்துகொள்வது; யுத்தம் முடிந்ததும் ஆப்கனுக்குப் போய்க்கொள்ளலாம் என்று முடிவு செய்தார்கள்.

ஆனால், தற்செயலாக ஒரு ரயில் பயணத்தில் ஓர் அரேபியக் குழுவினரைச் சந்திக்கும் வாய்ப்பு, நால்வரில் ஒருவனான ரம்ஸி பினல் ஷிப்புக்குக் கிடைத்தது. இவனும் அரபி, அவர்களும் அரபி என்பதால், சிநேகம் ஏற்பட்டுப் பேசினார்கள். காலித் அல் மஸ்ரி என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட அக்குழுவில் இருந்த ஒருவன், ரம்ஸி செச்னியாவுக்குச் செல்ல உத்தேசித்திருப்பதை அறிந்து, 'நீங்கள் டியூஸ்பெர்க்கிலுள்ள அபூ முசாபைச் சந்தியுங்கள்' என்று சொன்னான்.

அபூ மூசாப் என்பவர் அப்போது ஜெர்மனில் இயங்கி வந்த அல் காயிதா கிளையின் கமாண்டர்.

என்னடா இது ஜம்மாரும் அல் காயிதாவைச் சொல்கிறார், இந்த வழியில் போகும் யாரோ ஒருவனும் அதையே சொல்கிறானே என்று யோசித்தபடி, அவர் கொடுத்த தொலைபேசி எண்ணுக்கு ஒரு போன் செய்தான் பினல்ஷிப்.

தன்னைப் பற்றி, தன் நண்பர்களைப் பற்றி, செச்னியாவுக்குச் செல்ல உத்தேசித்திருக்கும் தங்கள் திட்டம் பற்றி எல்லாம் விரிவாக விளக்கினான். அபூ முசாப், ரம்ஸியிடம் உடனடியாக டியூஸ்பெர்க் வந்து தம்மைச் சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார்.

பினல்ஷிப், ஜரா, ஷெஹி மூவரும் சென்று அவரைச் சந்தித்தார்கள். இந்த முதல் சந்திப்பில் அட்டா கலந்துகொள்ளாததன் காரணம் தெரியவில்லை.

அபூ முசாப் அவர்களிடம் செச்னியாவுக்குச் செல்லுவதில் உள்ள சிக்கல்கள் பற்றி விளக்கிக் கூற ஆரம்பித்தார். செச்னியாவுக்குப் போகும் பல பயணிகள், வழியில் ஜார்ஜியாவில் தடுத்து நிறுத்தப்படுவதை எடுத்துச் சொன்னார். தங்கள் திட்டத்தை மாற்றிக்கொண்டு அவர்கள் ஆப்கனிஸ்தானுக்குச் சென்று போர்ப்பயிற்சி பெற்று, பிறகு கொஞ்சம் நிலவரம் சீரானதும் செச்னியாவுக்குச் செல்லலாம் என்று யோசனை கூறினார்.

முதலில் தயங்கினாலும் பிறகு ஒப்புக்கொண்டார்கள். ஆனாலும் இடையில் அவர்கள் நாலு பேருமே ஒருமுறை செச்னியா செல்ல முயற்சி செய்து, அபூ சொன்னதுபோலவே பல சிக்கல்களில் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள். எப்படியோ போய்ச் சேர்ந்து அங்கே நடைபெறும் யுத்தத்தில் பங்குபெறுவது குறித்த முதல் கட்ட ஆலோசனைகளை நடத்திக்கொண்டிருந்தபோதுதான், ஒசாமாவிடமிருந்து அவர்களுக்கு அழைப்பு வந்தது.

முதலில் அவர்களால் நம்பவே முடியவில்லை. ஆனால், அல் காயிதாவின் நெட் ஒர்க் பலம் புரிந்தபோது, வியப்பில் வாய் பிளந்துவிட்டார்கள். தங்களுடன் பேசிக்கொண்டிருந்த அந்த முதல் தினத்திலேயே அபூ, அல் காயிதாவின் தலைமைக்கு விஷயத்தைத் தெரிவித்திருக்கிறார் என்பது அவருடனான அடுத்த சந்திப்பின்போது, அவர்களுக்குப் புரிந்தது.

சரி, அல் காயிதாவே சரணம் என்று நான்கு பேரும் அபூவை மீண்டும் சந்தித்தபோது, 'நீங்கள் முதலில் பாகிஸ்தான் விசா வாங்க ஏற்பாடு செய்யுங்கள். மற்றதைப் பிறகு சொல்லுகிறேன்' என்று சொன்னார்.

அதன்படி, நான்கு நண்பர்களும் பாகிஸ்தான் விசா வாங்கிக்கொண்டார்கள். அபூ அவர்களிடம் முதலில் கராச்சிக்குச் செல்லும்படியும் அங்கிருந்து குவெட்டா நகரைச் சென்றடையும்படியும் சொன்னார். அங்கே உள்ள தாலிபன் அலுவலகத்தில் உமர் அல் மஸ்ரி என்ற அதிகாரியைச் சந்தித்துப் பேசவும் அறிவுறுத்தினார்.

1999 நவம்பர் கடைசி வாரத்தில் அட்டாவும் ஜராவும் முதலில் ஹாம்பர்க்கை விட்டுப் புறப்பட்டார்கள். ஓரிரு நாள் இடைவெளியில் ஷெஹியும் புறப்பட்டான். இரண்டு வாரங்கள் கழித்து பினல்ஷிப் புறப்பட்டான்.

குவெட்டாவை அடைந்து அங்கிருந்த தாலிபன் அலுவலகத்தில் 'உமர் அல் மஸ்ரி என்பவரைச் சந்திக்கவேண்டும்' என்று சொன்ன பினல்ஷிப்புக்கு, ஒரு விநோதமான அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அலுவலகத்தில், அந்தப் பெயரில் ஒருவர் கூட இல்லை. மிகவும் குழப்பமடைந்த பினல்ஷிப்புக்குப் பிறகுதான் விஷயம் புரிந்தது.

உமர் அல் மஸ்ரி என்பது ஒரு நபரின் பெயரல்ல. அது ஒரு சங்கேதச் சொல். அந்தப் பெயரைச் சொல்லிக்கொண்டு வருபவர்களை குவெட்டாவிலிருந்து பத்திரமாக கந்தஹாருக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்பது ஏற்பாடு.

அதன்படியே, கந்தஹாருக்குப் போய்ச் சேர்ந்த பினல்ஷிப், அங்கே தன் மற்ற மூன்று சகாக்களையும் கண்டு, இணைந்துகொண்டான். பினல்ஷிப் வந்து சேருவதற்கு முன்னதாகவே அட்டாவும் ஜராவும் ஒசாமா பின்லேடனைச் சந்தித்துப் பேசி, அல்காயிதாவில் தங்களை முறைப்படி இணைத்துக்கொண்டிருந்தார்கள். ஓரிரு தினங்களில் பினல்ஷிப்பும் பின்லேடனைச் சந்தித்தான்.

உடனடியாக அவர்கள் நாலு பேருக்குமான பயிற்சிகள் ஆரம்பமாயின.

நிற்க. இதைக் கவனமாகப் படித்துக்கொண்டு வரும் வாசகர்களுக்கு இந்த இடத்தில் கொஞ்சம் ஸ்கிரீன் ப்ளே உதைப்பதுபோலத் தோன்றவேண்டும். ஜெர்மன் நண்பர்கள் ஒசாமாவைச் சந்திப்பது அதுவே முதல்முறை. என்ன... ஒருமாத காலப் பயிற்சி அங்கே நடைபெற்றிருக்குமா?

இந்த ஒரு மாதத்துக்குள் எப்படி அவர்கள் ஒசாமாவின் மனம் கவர்ந்த மரணத் தூதர்களாக ஆகிவிட முடியும்? அல் காயிதாவில் இல்லாத மூத்த போராளிகளா? முன்னப்பின்ன ஆயுதம் தூக்கியவர்கள் கூட இல்லை. நாலு பேரும் துப்பாக்கியைப் பார்ப்பது கூட அதுதான் முதல்முறை. அப்படி ஒரு மாத காலத்துக்குள் என்ன செய்து

அவரைக் கவர்ந்திருப்பார்கள்? அத்தனை பெரிய திட்டத்தின் கமாண்டராக அட்டாவை எப்படி ஒசாமா தேர்ந்தெடுத்தார்?

சொல்லப்போனால், 9/11 திட்டத்தில் சம்பந்தப்பட்ட சவூதி அரேபிய அல் காயிதா போராளிகள் எல்லோரும் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு காலம் அல் காயிதாவின் உறுப்பினர்களாக இருந்தவர்கள். வேறு பல திட்டங்களில் பங்குகொண்டு, முன்னதாக சாதித்துக் காட்டியவர்கள். அவர்களையெல்லாம் விட்டு ஏன் அட்டாவை கமாண்டர் ஆக்கவேண்டும்?

ஜெர்மனியில் இருந்தவன், இங்கிலீஷ் பேசுவான் என்பதாலா? படித்தவன் என்பதாலா? விமானம் கடத்தவும் மோதிக் கவிழ்க்கவும் இங்கிலீஷ் என்ன அத்தனை முக்கியமா?

இதற்கு ஒரே பதில், தெரியவில்லை என்பதுதான்!